# தொழில் துறை

## பெருந்தொழில்

### மானியக் கோரிக்கை எண். 27

## அறிவிப்புகள்
## 2021-2022

**தங்கம் தென்னரசு**

**தொழில் துறை அமைச்சர்**

**1. தென்மாவட்டங்கள் பொருளாதார வளர்ச்சி அடையும் வகையில், விருதுநகர் மாவட்டம், குமாரலிங்கபுரம் சிப்காட் தொழிற்பூங்காவில், 250 ஏக்கர் பரப்பளவில், 400 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகளுடன் ஒருங்கிணைந்த ஆடைப் பூங்கா (Integrated Apparel Park) உருவாக்கப்படும்**

தமிழ்நாட்டில் ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கு, ஆடைப்பிரிவின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டும், தென்மாவட்டங்கள் பொருளாதார வளர்ச்சி அடையும் வகையிலும், விருதுநகர் மாவட்டம் குமாரலிங்கபுரத்தில், 250 ஏக்கர் பரப்பளவில், 400 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகளுடன் ஒருங்கிணைந்த ஆடைப்பூங்கா (Integrated Apparel Park) ஒன்று உருவாக்கப்படும்.

இந்த ஆடைப்பூங்கா ஆயத்த தொழிற்கூடங்களுக்கான வசதி, பொருள் தயாரிப்பு காட்சி மையம், திறன் மேம்பாட்டு மையம், சோதனை ஆய்வகம், தளவாட மையம், தொழிலாளர் விடுதி, சுகாதார மையம், வணிக மையம் போன்ற சிறப்பு உள்கட்டமைப்பு வசதிகளுடன் அமையும். இந்த ஆடைப்பூங்கா 15,000 நபர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



**2. சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில் நுட்பங்கள் அதிக முக்கியத்துவம் பெறும் என எதிர்பார்க்கப்படுவதால், கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி சிப்காட் தொழிற்பூங்காவில், 300 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், இந்தியாவிலேயே முதன்மையான வருங்கால நகர்திறன் பூங்கா (Future Mobility Park) உருவாக்கப்படும்**

தற்போது நடைமுறையில் உள்ள பெட்ரோல், டீசல் அடிப்படையிலான வாகனங்கள் படிப்படியாகக் குறைந்து, வருங்காலங்களில் போக்குவரத்து அமைப்புகளில் பெரும் மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மின்சார வாகனங்கள், தன்னியக்க வாகனங்கள், ஹைட்ரஜன் வாகனங்கள், அறிவுசார் தொடரமைப்பு மற்றும் போக்குவரத்து மேலாண்மை போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில் நுட்பங்கள் அதிக முக்கியத்துவம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு, கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரியில் 300 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் வருங்கால நகர்திறன் பூங்கா (Future Mobility Park) உருவாக்கப்படும். சிப்காட் நிறுவனம் எடுக்கும் இந்த புதிய முயற்சி இந்தியாவிலேயே முதன்மையானது என்பது குறிப்பிடத்தக்கது.



**3. திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், செங்காத்தாகுளத்தில், 576 ஏக்கர் பரப்பளவில் 250 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், அடிப்படை மற்றும் சிறப்பு உள்கட்டமைப்பு வசதிகளுடன் புதிய சிப்காட் தொழிற்பூங்கா உருவாக்கப்படும்**

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், செங்காத்தாகுளத்தில், 576 ஏக்கர் பரப்பளவில் 250 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், அடிப்படை மற்றும் சிறப்பு உள்கட்டமைப்பு வசதிகளுடன் புதிய தொழிற்பூங்கா ஒன்று உருவாக்கப்படும். இத்தொழிற்பூங்கா மூலம் 2000 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்படுவதுடன், 3000 நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

**4. இயற்கைச் சூழலை பாதுகாத்திடவும், தொழிற்சாலைகளின் செயல்பாடு மேம்படவும், அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன், 150 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், 10 சிப்காட் தொழிற்பூங்காக்கள் மேம்படுத்தப்படும்**

சாலை, மழைநீர் வடிகால், நீர் விநியோகம், தெருவிளக்கு மற்றும் பசுமை வளையம், திடக்கழிவு மேலாண்மை மற்றும் பாதுகாப்பு வசதி ஆகிய அடிப்படை கட்டமைப்பு வசதிகள் 150 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 10 சிப்காட் தொழிற்பூங்காக்களில் மேம்படுத்தப்படும். இதன் மூலம் இயற்கைச் சூழல் பாதுகாக்கப்படுவதுடன், தொழிற்சாலைகளின் செயல்பாடும் மேம்படும்.



**5. சிப்காட் தொழிற்பூங்காக்கள் நீர் ஆதாரத்தில் தன்னிறைவு பெறவும், நீர்நிலைகளைச் சுற்றிலும் பசுமைச் சூழல் உருவாக்கும் பொருட்டும், சிப்காட் தொழிற்பூங்காக்கள் மற்றும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள நீர் நிலைகள் 100 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மறுசீரமைக்கப்படும்**

சிப்காட் தொழிற்பூங்காக்கள் மற்றும் அதனை சுற்றியுள்ள நீர்நிலைகள் 100 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மறு சீரமைக்கப்படும். இதன் மூலம், நீர்நிலைகளின் மண் கரைகளை உயர்த்தி உறுதியாக்குதல், சிற்றணைகளையும், மதகுகளையும் பழுதுபார்த்தல், வரத்துக் கால்வாய்களைத் தூர்வாருதல் ஆகிய பணிகள் நபார்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும். இதனால் சிப்காட் தொழிற்பூங்காக்கள் நீர் ஆதாரத்தில் தன்னிறைவு பெறுவதுடன், இந்நீர்நிலைகளைச் சுற்றிலும் பசுமைச் சூழல் உருவாக்கப்பட்டு, பொழுதுபோக்கு உள்கட்டமைப்பு வசதிகள் போன்றவை கிடைக்கப்பெறும்.

இத்திட்டத்தின் முதற் கட்டமாக, இருங்காட்டுக்கோட்டை, வல்லம்–வடகால், பிள்ளைப்பாக்கம், திருப்பெரும்புதூர் மற்றும் ஒரகடம் தொழிற் பூங்காக்களை ஒட்டியுள்ள நீர்நிலைகள் மேம்படுத்தி, மறுசீரமைக்கப்படும்.



**6. பணிபுரியும் மகளிரின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு, 70 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், 2 ஏக்கர் பரப்பளவில் சிறுசேரி மற்றும் பர்கூர் சிப்காட் தொழிற் பூங்காக்களில் சிறப்பு வசதிகளுடன், பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் அமைக்கப்படும்**

பணிபுரியும் மகளிர் தங்கள் பணியிடத்திற்கு அருகில் பாதுகாப்புடன், நியாயமான கட்டணத்தில் தங்குவதற்கு ஏதுவாக, 2 ஏக்கர் பரப்பளவில் சிறுசேரி மற்றும் பர்கூர் சிப்காட் தொழிற்பூங்காக்களில் தங்கும் விடுதிகள் அமைக்கப்படும். குளிர்சாதன வசதியுடன் கூடிய அறைகள், ஓய்வறைகள், குழந்தைகள் பாதுகாப்பு மையம் மற்றும் கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) கொண்ட பாதுகாப்பு அமைப்பு (Security) உள்ளிட்ட சிறப்பு வசதிகளைக் கொண்டு, 70 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் இவ்விடுதிகள் அமைக்கப்படும். இதன் மூலம் 1000 மகளிர் பயன்பெறுவர்.

**7. தொழில் துவங்கும் காலத்தினையும் முதலீட்டுச் செலவினையும் குறைத்து, உடனடியாக தொழில் துவங்குவதற்கு ஏதுவாக, முதற்கட்டமாக, 5 ஏக்கர் பரப்பளவில், 1,50,000 சதுரஅடி கட்டுமானப் பரப்பில், காஞ்சிபுரம் மாவட்டம், நெமிலியில் தயார் நிலையிலுள்ள தொழிற்சாலைகள் (Ready Built Factory), 40 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்**

தொழில் முனைவோர்களின் தேவையினை கருத்தில் கொண்டு, தொழில் துவங்கும் காலத்தினையும் முதலீட்டுச் செலவினையும் குறைத்து, உடனடியாக தொழில் துவங்குவதற்கு ஏதுவாக, காஞ்சிபுரம் மாவட்டம், நெமிலியில் 50 ஏக்கர் பரப்பளவில், தயார் நிலையிலுள்ள தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படும். முதற்கட்டமாக, 5 ஏக்கர் பரப்பளவில், 1,50,000 சதுரஅடி கட்டுமானப் பரப்பில், தேவையான அடிப்படை வசதிகளுடன், சுமையேற்றுதல் மற்றும் இறக்குதலுக்கான வசதி, தானியங்கி சுமையேற்றி (loading lift), வாகன நிறுத்துமிடம் போன்ற வசதிகளுடன், 40 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் இத்தொழிற்பூங்கா அமைக்கப்படும்.



**8. சர்வதேச தரத்திலான ஜவுளிப் பூங்கா ஒன்று சிப்காட் மூலம் கரூர் மாவட்டத்தில் 200 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படும்.**

கரூர் மாவட்டம், ஜவுளி உற்பத்தி மற்றும் ஏற்றுமதி தொழிலில் ஒரு முன்னோடி மாவட்டமாக திகழ்ந்து வருகின்றது. ஆண்டுக்கு சுமார் பத்தாயிரம் கோடி ரூபாய் அளவில் ஜவுளி மற்றும் ஆயத்த ஆடை பொருட்கள் கரூர் மாவட்டத்தில் இருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த ஏற்றுமதியை ஆண்டுக்கு 25 ஆயிரம் கோடி ரூபாய் அளவில் அதிகப்படுத்த தமிழ்நாடு அரசு முனைந்து வருகிறது. இந்த குறிக்கோளை அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் எட்டுவதற்கு ஏதுவாக, சிப்காட் மூலம் சர்வதேச தரத்திலான ஜவுளி பூங்கா ஒன்று கரூர் மாவட்டத்தில் 200 ஏக்கர் பரப்பளவில் ஏற்படுத்தப்படும்.

ஜவுளி பதனம் செய்யும் பிரிவு (Textile processing unit), ஆயத்த ஆடை தயாரிக்கும் பிரிவு (Readymade garments unit), வீட்டு ஜவுளி உற்பத்திப் பிரிவு (Home textiles unit), உலகத்தரம் வாய்ந்த பரிசோதனை

கூடம் (Testing facility of international standards), கண்காட்சி கூடம் (Exhibition hall), உற்பத்தி மேம்பாட்டு மையம், ஜவுளி வடிவமைப்பு மையம் (Textile design centre), மற்றும் ஜவுளி தொழிலாளர்களுக்கு என பிரத்யேகமான திறன் மேம்பாட்டு மையம் (Skill development centre) போன்ற சிறப்பு அம்சங்களுடன் இப்பூங்கா அமைக்கப்படும்.



**9. பாதுகாப்பு தொழில் பெருவழித் திட்டத்தில் கூடுதல் முதலீட்டை ஈர்க்கும் விதமாக, 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னையில் ரேடியோ அதிர்வலை மற்றும் ஆண்டெனா தொழில்களுக்கான பொது சோதனை வசதி மையம் மற்றும் உளுந்தூர்பேட்டையில் ஆளில்லா விமானத் தொழிலுக்கான பொது சோதனை வசதி மையம் அமைக்கப்படும்**

பாதுகாப்பு தொழில் பெருவழியில் பல்வேறு வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில் நிறுவனங்கள் இதுவரை சுமார் 2000 கோடி ரூபாய் வரை முதலீடுகள் செய்துள்ளன. இப்பெருவழி திட்டத்தில் கூடுதல் முதலீட்டை ஈர்ப்பதற்கு ஏதுவாக, சென்னையில் ரேடியோ அதிர்வலை (Radio Frequency) மற்றும் ஆண்டெனா தொழில்களுக்கான பொது சோதனை வசதி மையமும், உளுந்தூர்பேட்டையில் ஆளில்லா விமானத் தொழிலுக்கான பொது சோதனை வசதி மையமும், 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

## 10. வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறை சார்ந்த தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில், 50 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், பாதுகாப்புத் துறை சார்ந்த உற்பத்தி தொழிலுக்கான பொது சோதனை வசதி மையம் (Common Testing Facility) திருச்சிராப்பள்ளியில் அமைக்கப்படும்

சிறு தொழில் நிறுவனங்களின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், தொழில்நுட்ப உதவிகளை வழங்கவும், சுமார் 60 சிறு தொழில் நிறுவனங்களால் இணைந்து தொடங்கப்பட்ட, திருச்சிராப்பள்ளி பொறியியல் மற்றும் தொழில்நுட்ப குழுமத்தில் (TREAT) 43% பங்குகளை டிட்கோ நிறுவனம் பெற்றுள்ளது. திருச்சிராப்பள்ளியில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப சேவைகள் வழங்க ஒரு பொது வசதி மையத்தை (Common Facility Centre) இக்குழுமம் ஏற்கனவே அமைத்துள்ளது.

பாதுகாப்புத் தொழில் பெருவழியில் உள்ள திருச்சிராப்பள்ளியில் வான்வெளி மற்றும் பாதுகாப்பு துறை சார்ந்த தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில், ஒரு பொது சோதனை வசதி மையம் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.



## 11. வானூர்தி மற்றும் பாதுகாப்புத் துறையில் புதிய முதலீடுகளை ஈர்க்கவும் மற்றும் அத்துறையில் ஏற்பட்ட மாற்றத்திற்கு ஏற்பவும், திருத்தப்பட்ட தமிழ்நாடு வானூர்தி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை வெளியிடப்படும்

'தமிழ்நாடு வானூர்தி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை' 2019ல் வெளியிடப்பட்டது. வானூர்தி மற்றும் பாதுகாப்புத் துறையில் புதிய முதலீடுகளை ஈர்ப்பதற்காகவும் கடந்த இரண்டு ஆண்டுகளில் வானூர்தி மற்றும் பாதுகாப்பு துறையில் ஏற்பட்ட மாற்றத்திற்கு ஏற்பவும், வானூர்தி மற்றும் பாதுகாப்பு துறை சார்ந்த தொழில் நிறுவனங்களை பாதுகாப்பு தொழில் பெருவழியில் ஏற்படுத்தவும், தமிழ்நாடு அரசு 'தமிழ்நாடு வானூர்தி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை' என்ற திருத்தப்பட்ட கொள்கையை வெளியிடும்.

2030ஆம் ஆண்டுக்குள் வானூர்தி மற்றும் பாதுகாப்புத் துறையில் சுமார் 50,000 கோடி முதலீடுகளை ஈர்த்து, 10 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதே இக்கொள்கையின் குறிக்கோளாகும்.

## 12. தொழில் நிறுவனங்கள், பொருட்களை நுகர்வோருக்கு தங்கு தடையின்றி கொண்டு செல்ல ஏதுவாக, ஒருங்கிணைந்த மாநில சரக்கு போக்குவரத்திற்கான திட்டம் (State Integrated Logistics Plan) தயாரிக்கப்படும்

சரக்குகளை கையாளுவதற்கான ஒரு பல்நோக்கு வழித்தட இணைப்பினை (multi modal connectivity) உருவாக்கும் பொருட்டு, "ஒருங்கிணைந்தமாநிலசரக்கு போக்குவரத்திற்கான திட்டம்" ஒன்றினை தமிழ்நாடு அரசு தயாரிக்கும். மாநிலங்களுக்குள்ளும் மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான சாலை, இரயில், வான் மற்றும் கடல் வழித்தடங்களை இணைத்து, சேமிப்பு கிடங்குகள், குளிர் பதன கிடங்குகள் வாயிலாக, தொழில் நிறுவனங்களின் பொருட்களை நுகர்வோருக்கு தங்கு தடையின்றி கொண்டு செல்ல இத்திட்டம் உதவும்.



## 13. ஏற்றுமதி சந்தைகளை ஊக்குவித்திடவும், ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, ஏற்றுமதி தொடர்பான அனுமதிகள் உடனடியாக பெற்றுத் தந்திடவும், தமிழ்நாட்டில் ஏற்றுமதிக்காக ஒரு சிறப்பு அமைப்பு (Exports Cell) உருவாக்கப்படும்

இந்தியாவிலேயே, மூன்றாவது பெரிய ஏற்றுமதி மாநிலமாக 8.97 சதவிகித ஏற்றுமதி பங்களிப்புடன் தமிழ்நாடு திகழ்கிறது. மோட்டார் வாகனங்கள், தோல் பொருட்கள், ஆயத்த ஆடைகள், காலணிகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களின் ஏற்றுமதியில், தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. ஏற்றுமதி சந்தைகளை மேலும் ஊக்குவித்திடும் வகையிலும், இது சார்ந்த தொழிலகங்களுக்கு உதவிடும் வகையிலும் மற்றும் அறிவார்ந்த தகவல் சேவைகள் (Intellectual information) பரிவர்த்தனைக்காகவும், ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து ஏற்றுமதி தொடர்பான அனுமதிகள் உடனடியாக பெற்றுத் தந்திடவும், இடர்பாடுகளைக் களையவும், தொழில் வழிகாட்டி நிறுவனத்தில் ஒரு சிறப்பு அமைப்பு (Exports Cell) உருவாக்கப்படும்.

## 14. புத்தாக்க வளர்ச்சிக்கும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்களில் முதலீடுகளை அதிக அளவில் ஈர்த்து வேலை வாய்ப்பினை பெருமளவில் அதிகரிக்கும் பொருட்டும், தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை வெளியிடப்படும்

ஒன்றிய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடுகளுக்கான செலவினங்கள் மேற்கொள்வதில், அகில இந்திய அளவில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளதாகத் தெரிவித்துள்ளது. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணிகளுக்கென தமிழ்நாடு தொழில் கொள்கை-2021ல் ஏற்கனவே ஊக்கத் தொகை வழங்கப்படும் என குறிப்பிடப்பட்டு உள்ளது. எனினும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு மேலும் கவனம் செலுத்த வேண்டும் என அரசு கருதுகிறது. ஏனெனில்,நிலையானதொழில்வளர்ச்சிஅடைந்திட, ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புத்தாக்கம் ஆகியவை முக்கிய பங்கு வகிக்கின்றன. இதன் மூலம் உயர் மதிப்புள்ள தொழில் வாய்ப்புகளை நமது மாநிலத்தில்



ஈர்த்து, உலகச் சந்தையில் நமது மாநிலம் முன்னணி பெற இயலும் என அரசு கருதுகிறது.

இதனை கருத்தில் கொண்டு, புத்தாக்க வளர்ச்சிக்கும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்களில் முதலீடுகளை அதிக அளவில் ஈர்த்து வேலை வாய்ப்பினை பெருமளவில் அதிகரிக்கும் பொருட்டு, ஒரு பிரத்யேக "ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை" விரைவில் வெளியிடப்படும். தொழில்துறை 4.0, உலகளாவிய செயல்திறன் மையங்கள் (GCC) மற்றும் தொழில் கல்வி ஒருங்கிணைப்பு ஆகியவற்றில் முக்கிய கவனம் செலுத்தி, ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புத்தாக்கச் சூழலை மாநிலத்தில் மேம்படுத்தும் வகையில், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு உட்கட்டமைப்புகளுக்கு ஆதரவு அளித்து, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் துவங்கிட முன்வருவோர்க்கு, ஊக்கத் தொகுப்புச் சலுகைகள் வழங்கிட இந்தக் கொள்கை வழிவகை செய்யும்.

**15. வணிகம் புரிதலை எளிதாக்கிடவும், முதலீட்டாளர்கள் தொழில் துவங்கத் தேவையான அனைத்து அனுமதிகளையும் உடனுக்குடன் பெற்று, தங்களது திட்டத்தினை விரைவாகவும், எளிதாகவும் செயல்படுத்துவதற்கு ஏதுவாக, ஒற்றைச் சாளர இணையதளம் 2.0 – கைபேசி செயலி உருவாக்கப்படும்**

வணிகம் புரிதலை மிகவும் எளிதாக்கிடவும், அதற்கு உகந்த சூழ்நிலையினை உருவாக்கிடவும், முதலீட்டாளர்கள் தொழில் துவங்கத் தேவையான அனைத்து அனுமதிகளையும் உடனுக்குடன் பெற்று, தங்களது திட்டத்தினை விரைவாகவும், எளிதாகவும் செயல்படுத்துவதற்கு ஏதுவாக, 100 சேவைகள் கொண்ட ஒரு அதி நவீன ஒற்றைச்சாளர இணையம் 2.0, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

கூடுதலாக 100 சேவைகள் இந்த மேம்படுத்தப்பட்ட இணையதளத்தில் சேர்க்கப் படுவதுடன், இந்த ஒற்றைச் சாளர முறையை மிக எளிதாக பயன்படுத்திடும் வகையில், கைபேசி செயலி ஒன்று உருவாக்கப்படும்.



**16. மின்சார வாகனங்கள் உற்பத்தியிலும் உபயோகத்திலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், தேவைகள் மற்றும் பயன்பாடுகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டும், மின்னேற்றுக் கட்டமைப்புகளை ஊக்குவிக்கும் வகையிலும், திருத்தப்பட்ட மின்வாகன (E-vehicle) கொள்கை வெளியிடப்படும்**

மின்சார வாகனங்கள் உற்பத்தியிலும் உபயோகத்திலும் தற்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், தேவைகள் மற்றும் பயன்பாடுகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, மின் வாகனங்கள் உற்பத்தியை பன்மடங்கு அதிகரிக்கும் வகையில், மின்னேற்றுக் கட்டமைப்புகளை ஊக்குவிக்கும் வகையிலும், பயனாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்திடும் வகையிலும், பல சிறப்பு அம்சங்கள் சேர்க்கப்பட்டு, திருத்தப்பட்ட மின் வாகனக் கொள்கை வெளியிடப்படும்.

**17. பொறியியல், தொழில் நுட்பம் மற்றும் மேலாண்மை ஆகிய பிரிவுகளில் முன்னணி கல்வி நிறுவனங்களை அடையாளம் கண்டு, வளர்ந்துவரும் தொழில்களுக்கு தேவைப்படும் உயரிய தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு, புதிய பாடத்திட்டங்கள் வடிவமைத்திடவும், பயிற்சி வகுப்புகள் நடத்திடவும், அனுபவ ரீதியில் கற்றலை ஊக்குவித்திடவும், வழிகாட்டி நிறுவனத்தில் ஒரு சிறப்புப் பணி ஆய்வக பிரிவு (Work Lab Cell) அமைக்கப்படும்**

தமிழ்நாட்டில், தொழிலகங்களுக்கான உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பினை உருவாக்குதல் மற்றும் வணிகம் புரிதலை எளிதாக்குதல் போன்ற சீரிய முயற்சிகளோடு மட்டுமல்லாமல், Industry 4.0–க்காக திறன் மிகுந்த பணியாளர்கள் தயார் நிலையில் இருக்கும் வகையில் ஒரு சூழலை உருவாக்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக, வழிகாட்டி நிறுவனத்தில், சிறப்புப் பணி ஆய்வக பிரிவு ஒன்று அமைக்கப்படும்.



தற்போது வளர்ந்து வரும் தொழில்களுக்குத் தேவைப்படும் உயரிய தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு புதிய பாடத்திட்டங்கள் வடிவமைத்திடவும், மாநிலத்தில் உள்ள பொறியியல், தொழில் நுட்பம் மற்றும் மேலாண்மை ஆகிய பிரிவுகளில் முன்னணி கல்வி நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டு, பயிற்சி வகுப்புகள் நடத்திடவும், அனுபவ ரீதியில் கற்றலை ஊக்குவித்திடவும், இந்த சிறப்புப் பணி ஆய்வக பிரிவு தொழிலகங்களுடனும், கல்வி நிறுவனங்களுடனும் இணைந்து செயலாற்றும்.

**18. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களைப் பயன்படுத்தி மின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக, ஆலங்குளத்தில் 10 மெகா வாட் திறன் கொண்ட சூரிய மின்சக்தி ஆலை (Solar Power Plant) ஒன்று 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்**

தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனமும், சிப்காட் நிறுவனமும் இணைந்து புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களைப் பயன்படுத்தி தங்களது மின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக, ஒரு சிறப்பு நோக்க நிறுவனத்தினை (SPV) உருவாக்கும். முதற்கட்டமாக, 10 மெகா வாட் திறன் கொண்ட சூரிய மின்சக்தி ஆலை ஒன்றை, 45 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், ஆலங்குளம் சிமெண்ட் ஆலைக்கு சொந்தமான நிலத்தில் சிறப்பு நோக்க நிறுவனத்தால் நிறுவப்படும்.



**19. உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளுக்கு தேவைப்படும் அதிக அளவு சிமெண்ட், மிக குறுகிய காலத்தில் கொண்டு சேர்க்கும் வகையில், 100 டன் ஏற்றுத்திறன் கொண்ட சிமெண்ட் மொத்தமாக ஏற்றும் அமைப்பு (Bulk Loading System) சுமார் 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரியலூரில் உள்ள புதிய ஆலையில் ஏற்படுத்தப்படும்**

தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளுக்கு தேவைப்படும் அதிக அளவு சிமெண்ட், மிக குறுகிய காலத்தில் கொண்டு சேர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கில், அரியலூரில் உள்ள புதிய ஆலையில் சுமார் 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மணிக்கு 100 டன் சிமெண்ட் ஏற்றுத்திறன் கொண்ட, மொத்தமாக சிமெண்ட் ஏற்றும் அமைப்பு ஒன்று, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தால் ஏற்படுத்தப்படும்.

## 20. உப்பள தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, அவர்தம் குடும்பங்களுக்கு மழைக்கால நிவாரணமாக ஆண்டொன்றுக்கு ரூபாய் 5000 வழங்கப்படும்

மழைக் காலங்களில் உப்பு உற்பத்தி தொழில் தடைபடுகின்றது. அப்போது எல்லாம் வருமானம் இல்லாமலும், போதிய மாற்றுப்பணி கிடைக்க வாய்ப்பில்லாமலும், உப்பள தொழிலாளர்கள் வாழ்க்கையை நடத்த பெரிதும் சிரமப்படுகின்றனர். அவர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நலவாரியத்தில் பதிவு செய்துள்ள உப்பள தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு, மழைக்கால நிவாரணமாக ஆண்டொன்றுக்கு ரூபாய் 5000 வழங்கப்படும்.



## 21. முதன்முறையாக, செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூரில் 500 ஏக்கர் பரப்பளவில் 5.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உப்பு உற்பத்தி துவக்கப்படும்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கத்தை அடுத்து முதன்முறையாக தனது உப்பு உற்பத்தியின் விரிவாக்கத்தை செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூரில் 500 ஏக்கர் பரப்பளவில் இந்த ஆண்டு துவக்கும். 5.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (TIDCO) நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மூலமாக, முதற்கட்டமாக இந்நிதியாண்டில் 5000 மெட்ரிக் டன் உப்பு உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் 100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகும்.

## 22. வெளிச்சந்தையில் "நெய்தல்" என்ற புதிய வணிக பெயரில் உப்பு வகைகள் அறிமுகப்படுத்தப்படும்

தமிழ்நாடு உப்பு நிறுவனம் உற்பத்தி செய்கின்ற அயோடின் மற்றும் இரும்பு ஆகிய நுண்ணூட்டச்சத்துகள் அடங்கிய அயோடின் கலந்த கல் உப்பு (Iodised Crystal Salt), அயோடின் கலந்த சுத்திகரிக்கப்பட்ட தூள் உப்பு (Refined Free Flow Iodised Salt) மற்றும் இருவித இரும்பு மற்றும் அயோடின் செறிவூட்டப்பட்ட உப்பு (Double Iron & Iodine Fortified Salt) ஆகியவை "நெய்தல்"என்ற புதிய வணிக பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டு, பொதுமக்களுக்காக இந்த நிதியாண்டு முதல் வெளிச்சந்தையில் விற்பனை செய்யப்படும்.



## 23. உப்பு உற்பத்தியை அதிகரிக்க, இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கத்தில் இயந்திரங்கள் மூலம் உப்பு எடுக்கும் வகையில் உப்புப் பாத்திகள் 80 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்

இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கத்திலுள்ள உப்பளங்களின் உப்பு உற்பத்தியை அதிகரிக்க, 80 ஏக்கரில் இயந்திரம் மூலம் உப்பினை எடுக்கும் வகையில், 80 இலட்சம் ரூபாய் செலவில் உப்பு பாத்திகள் அமைக்கப்படும். இதன் மூலம் தற்போதைய 1.75 இலட்சம் டன்னில் இருந்து 2 இலட்சம் டன் அளவிற்கு உப்பு உற்பத்தி உயரும்.

**24. சர்க்கரை வைத்திருப்பு செலவைக் குறைத்திடவும், ஆலைகளின் பணப் புழக்கத்தை அதிகரித்திடவும், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் 170 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நாள் ஒன்றுக்கு 60 கிலோலிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட இரண்டு எத்தனால் ஆலைகள் நிறுவப்படும்**

சர்க்கரை வைத்திருப்பு செலவைக் குறைக்கவும், ஆலைகளின் பணப்புழக்கத்தை அதிகரிக்கவும், மாதாந்திர சர்க்கரை விற்பனை ஒதுக்கீட்டை மட்டுமே சார்ந்திராமல் இருக்கவும், ஒரு மெட்ரிக் டன் கரும்பு அரவையில் ஆலைக்கு கிடைக்கும் வருவாயை அதிகரிக்கும் வகையிலும், நாள் ஒன்றுக்கு 60 கிலோ லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட இரண்டு எத்தனால் ஆலைகள் 170 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் நிறுவப்படும். இவ்வாலைகள், நவீன எத்தனால் உற்பத்தி தொழில்நுட்பம் மற்றும் எரியூட்டுக் கொதிகலன் அடிப்படையிலான கழிவு நீர் இல்லா உத்தியுடன் அமைக்கப்படும்.



**25. செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் பெரம்பலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு புதிய கோள்கல பல்சக்கர பெட்டிகள் (Planetary Gear Box) 39.55 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்**

கோள்கல பல்சக்கர பெட்டிகளில் ஏற்படும் பழுது காரணமாக அரவை நேர இழப்பை தவிர்ப்பதற்காக கரும்பு கிக்கர் (cane kicker), இடைநிலை கேரியர் (inter carrier) மற்றும் கரும்பு சக்கை உயர்த்தும் சாதனம் (bagasse elevator) ஆகியவற்றின் கோள்கல பல்சக்கர பெட்டிகள் ஒவ்வொன்றிலும் ஒரு எண்ணிக்கையில் பெரம்பலூர் சர்க்கரை ஆலையிலும், கரும்பு கேரியர் (cane carrier) மற்றும் ரேக் கேரியர் (rake carrier) ஆகிய புதிய பாகங்களின் கோள்கல பல்சக்கர பெட்டிகள் செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் பெரம்பலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் 39.55 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

## 26. அரவை உருளை பழுதால் ஏற்படும் அரவை நேர இழப்பை தவிர்ப்பதற்காக, கள்ளக்குறிச்சி-1 கூட்டுறவு சர்க்கரை ஆலையில் புதிய லோட்டஸ் உருளை (Lotus Roller) 25.62 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்

கள்ளக்குறிச்சி-1 கூட்டுறவு சர்க்கரை ஆலையில் புதிய அரவை இயந்திரங்கள் 1995-96 அரவைப் பருவத்தில் நிர்மாணிக்கப்பட்டது. அரவை உருளை பழுதால் ஏற்படும் அரவை நேர இழப்பை தவிர்ப்பதற்காக, ஒரு புதிய லோட்டஸ் உருளை (Lotus Roller) கள்ளக்குறிச்சி-1 கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 25.62 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்.



## 27. செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் வளிஅழுத்த முறையில் இயங்கும் Pan valve (திறப்பு தடுக்கிதழ்) 20 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்

Pan valve (திறப்பு தடுக்கிதழ்) இயக்குதலை எளிமைப்படுத்தும் விதமாக வளி அழுத்த முறையில் இயங்கும் Pan valve ஒன்று, செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 20 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.

**தங்கம் தென்னரசு**
தொழில் துறை அமைச்சர்